அதைத் தவிர கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அதற்கான நடவடிக்கை எடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். எப்படியும் விரைவில் அவர்களுக்கு வேலை கொடுக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

(2) வட ஆற்காடு மாவட்டத்தில் மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் பேரிழப்பைக் குறித்து.

பி.ப. 4–20 THIRU V. ISVARMURTI : Mr. Chairman, Sir, on behalf of Thiru L. Balaraman, I wish to call the attention of the Hon. the Minister for Electricity to a matter of urgent public importance, namely, the heavy loss to the agriculturists since the crops about to be harvested and the standing crops have been affected due to the stoppage of power completely for the last three or four days in many parts of North Arcot district due to short supply of power.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: *தலைவரவர்களே, 15—2—73 முதல் மின்சார வெட்டு 75 சதவிகிதமாக உயர்த்தப்பட்டதிலிருந்து விவசாயத்திற்காக தரப்படுகிற மின்சாரம் பகல் நேரத்தில் நான்கு மணி நேரத்திற்கும் இரவில் கையிருப்பைப் பொறுத்து இரவு 10 மணி முதல் மறு நாள் காலை 6 மணி வரை கொடுக்கப்பட வேண்டும் என்றும் உத்திரவிடப்பட்டது.*

மார்ச் திங்கள் முதல் வாரத்தில் மாநில விவசாயப் பிரதிநிதிகள் மாண்புமிகு முதலமைச்சரை சந்தித்து சிலபல இடங்களில் 4 மணி நேரத்திற்குக்கூட மின் சாரம் தடையின்றி தரப்படுவதில்லை என்றும் அத்துடன் 4 மணி நேர சப்ளையை 6 மணி நேரத்திற்கு உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். இக்கோரிக் கையை ஆராய்ந்தபின் வேலூர் மின் திட்டப் பகுதியில் விவசாய மின் இணைப்புகள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு முதல் பிரிவுக்கு காலை 4 மணி முதல் 9 மணி வரையிலும் இரண்டாவது பிரிவுக்கு காலை 8½ மணி முதல் பகல் 1½ மணி வரையிலும், மூன்றாவது பிரிவுக்கு பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணி வரையிலுமாக ஒவ்வொரு பிரிவுகளும் 5 மணி நேரத்திற்கு பரீட்சார்த்த மாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

நெய்வேலி அனல் மின் நிலையத்தில் மார்ச் திங்கள் 23, 24-லும் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டதாலும் மார்ச் திங்கள் 25, 26, 27-ஆம் தேதிகளில் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 110 மெகவாட் கொதிகலனிலுள்ள குழாய்களில் பழுது

ஏற்பட்டு மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டதாலும் மார்ச் திங்கள் 23 ஆம் தேதியிலிருந்து 27-ஆம் தேதி வரை தமிழ் நாட்டில் மின்சார வினியோகத்தில் சில தட்டுப்பாடுகள் ஏற்பட்டன.

மேலும் ஆரணி துணை மின்நிலையத்தில் இந்தச் சமயத்தில் பழுது ஏற்பட்டதால் வடாற்காடு மாவட்டத்திலுள்ள சந்தவாசல், களம்பூர், திமிரி பகுதிகளில் மின்சாரம் கொடுப்பதில் தடங்கல் ஏற்பட்டது. இந்தப் பழுதுகள் நிவர்த்திக்கப்பட்டு தற்சமயம் முழு அளவில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மேலவைத் தலைவாவர்களே, "சட்டப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்களின் பாதுகாப்புச் சட்டத்தில் கூறியுள்ளபடி குத்தகை பாக்கி, நிலத்தை பயிரிடத் தவறியது போன்ற குறிப்பிட்ட காரணங்களுக்காக அன்றி மற்றபடி, பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து பயிரிடும் குத்தகைக்காரர்களுக்கு இச் சட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இதன் பின்னர், குத்தகை உரிமைப் பதிவேடுகளை தயாரிப்பதற்கும், பேணி வருவதற்குமாக, தமிழ் நாடு 1966-ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணங்கள் சட்டம் இயற்றப்பட்டது. மாநிலம் முழுவதும் இச்சட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1973, பிப்ரவரி 26-ஆம் நாளன்று வரவு-செலவுத் திட்ட உரையின் வாயிலாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு வேளாண்மை சீர்திருத்தத்தில் மற்றொரு நடவடிக்கையாக, பயிரிடும் குத்தகைக்காரர்கள் தாங்கள் குத்தகைக்கு பயிரிடும் நிலங்களை நில உடைமையாளர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளும் உரிமையை அவர்களுக்கு அளிக்க சட்டம் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது.

@ 273–288 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.